**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – **600 006.**

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்.
(சென்னை, காரைக்கால் மற்றும்
பாண்டிச்சேரி தவிர்த்து)

**ந.க.எண். 022738 /டி/2021** **நாள் : 16.02.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST) – பிப்ரவரி 2022 – அறிவுரைகள் வழங்குவது – குறித்து.

******

**27.02.2022** (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவுள்ள ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST) தேர்விற்கான தேர்வு மையங்களின் பட்டியல் ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்காண் தேர்வு நடத்துவது குறித்து கீழ்க்காண் அறிவுரைகளை அனைத்து தேர்வு மைய கண்காணிப்பாளர்களும் தவறாமல் கடைபிடிக்க உரிய அறிவுரைளை வழங்கிடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. **2021–2022** ஊரகத்திறனாய்வுத் தேர்வு (TRUST) கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு நடைபெறும்.

| **நாள்** | **நேரம்** |
|---|---|
| 27.02.2022<br>(ஞாயிற்றுக் கிழமை | **10.00** AM முதல் to **12.30** PM வரை |

2. ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு (TRUST) Bilingual முறையில் ஒரே வினாத்தாளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வினாக்கள் அச்சிட்டு வழங்கப்படும்.
3. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தங்கள் மையத்திற்கான பெயர்ப்பட்டியல், தேவையான வினாத்தாட்கள் மற்றும் OMR விடைத்தாட்கள் பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள உரிய அறிவுரை வழங்க வேண்டும்.
4. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் **20** மாணவர்கள் தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்வு அறைக்கும் **20** வினாத்தாட்கள் மற்றும் விடைத்தாட்கள் மட்டுமே வழங்கப்படும். எனவே, எக்காரணம் கொண்டும் **20** மாணவர்களுக்கு மேல் ஒரு தேர்வறையில் அமர அனுமதிக்கக்கூடாது.
5. **27.02.2022** அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST) தேர்விற்கான வினாத்தாள் கட்டுக்களை தேர்வு மையத்தில் காலை **8.45** மணிக்குள் சென்றடையும் வண்ணம் வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து சம்பந்தப்பட்ட தேர்வு மைய துறை அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

6. **துறை அலுவலர்கள் முதலில் வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திற்கு சென்று வினாத்தாள் கட்டுகளை பெற்று காலை 8.45 மணிக்குள் தேர்வு மையத்திற்கு சென்றடைய அறிவுறுத்த வேண்டும்.**

7. அனுமதிச்சீட்டு (Admission Card) உள்ள தேர்வர்கள் மட்டும் தேர்விற்கு அனுமதிக்கப்பட வேண்டும். புறச்சரக எண்ணில் (Out of Range Number) தேர்வெழுத கட்டாயமாக அனுமதி மறுக்கப்படுகிறது. புறச்சாரக பதிவெண்ணில் தேர்வெழுத அனுமதிக்கப்பட்டால் முதன்மைக் கல்வி அலுவலர்களே எதிர்கொள்ள வேண்டும். எனவே, தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு புறச்சரக எண்ணில் தேர்வெழுத அனுமதி வழங்க வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

8. பெயர்ப்பட்டியலில் பெயர், தலைப்பெழுத்து, பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் ஏதேனும் இருப்பின் உரிய திருத்தம் செய்து சான்றொப்பமிட்டு, பெயர் பட்டியலில் இறுதியுள்ள Abstract–ஐ பூர்த்தி செய்து முதன்மைக் கண்காணிப்பாளரின் கையொப்பம் பெற்று OMR விடைத்தாட்களுடன் தேர்வு நாளன்றே ஒப்படைக்க வேண்டும்.

9. தேர்வு முடிந்தவுடன் மாவட்டக் கல்வி அலுவலர் தங்கள் ஆளுகைக்குட்பட்ட தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் / மீதமுள்ள வினாத்தாள் கட்டுக்களை பெற்று முதன்மைக் கல்வி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்களுடன் இணைந்து தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மைய வாரியப் பட்டியலுடன் ஒப்பிட்டு சரிபார்த்து கொள்ள வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலர்கள் அதனை உரிய பாதுகாப்பு வசதியுடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

10. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் விடைத்தாள் கட்டுக்களை இத்துடன் இணைத்தனுப்பப்படும் வழித்தடங்களில் பாதுகாப்பாக Logistics Lorry –ல் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்காக Logistics Lorry சேவை இவ்வியக்கத்தால் மேற்கொள்ளப்படும்.

11. நாகர்கோவில், விருதுநகர், நீலகிரி, தருமபுரி மற்றும் நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலர்கள் விடைத்தாள் கட்டுக்களை **27.02.2022** அன்று Logistics Lorry மூலம் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகப் பணியாளர் ஒருவருடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள வழித்தடங்களில் உள்ள முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் உள்ள மந்தணக் கட்டுகளை பெற்று பாதுகாப்பாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் ஒப்படைக்க ஆவன செய்ய வேண்டும்.

..3..

**<u>தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கான முக்கிய அறிவுரைகள்:</u>**

1. **27.02.2022** அன்று அனைத்து தேர்வு மையத்திலும் நகராட்சி / உள்ளாட்சி துறைக்கு தெரிவித்து கிருமி நாசினி தெளித்து சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. **27.02.2022** அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கான (TRUST) வினாத்தாள் கட்டுக்களை தங்கள் மைய துறை அலுவலரிடமிருந்து **8.45** மணிக்குள் பெற்று உரிய அலமாரியில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

3. ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு (TRUST) Bilingual முறையில் ஒரே வினாத்தாளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வினாக்கள் அச்சிட்டு வழங்கப்படும்.

4. தேர்வர்கள் தேர்வு மையத்திற்கு வரும்போது Thermal Scanner கொண்டு உடல் வெப்ப பரிசோதனை செய்ய வேண்டும்.

5. தேர்வர்கள் தேர்வு மையத்திற்கு வரும் போது முகக்கவசம் அணிந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும. முகக்கவசம் அணியாமல் வரும் தேர்வர்களுக்கு முகக்கவசம் வழங்க ஏதுவாக தேர்வு மையங்களில் முகக்கவசங்கள் வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

6. கருப்பு மை கொண்ட பால்பாயின்ட் பேனாக்களை கையிருப்பில் வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

7. மாணவர்கள் அருகருகில் இருப்பதை தவிர்க்க தேர்வு மையத்தில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் Seating Plan ஐ அமைக்க வேண்டும்.

8. தேர்வுமையத்தில் தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர், துறை அலுவலர், ஆசிரியர்கள், எழுத்தர் உள்ளிட்ட அனைத்து நிலைப் பணியாளர்களும் முக கவசம் அணிந்து தேர்வு பணியில் ஈடுபட வேண்டும்.

9. தேர்வறைக்குள் தேர்வர்கள் அனுமதிக்கும் நேரம் வரை, சமூக இடைவெளியுடன் அமர்ந்து தேர்வுக்கு தயாராவதற்கு ஏதுவாக முதன்மைக் கண்காணிப்பாளர் போதுமான எண்ணிக்கையில் காத்திருப்பு அறைகளை (Waiting Rooms) அமைக்க அறிவுறுத்த வேண்டும்.

10. தேர்வுமைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தேர்வறை கண்காணிப்பாளர்களுக்கு தேர்வு நடத்துதல் குறித்த அறிவுரைகளை **9.30** மணிக்கு வழங்க வேண்டும்.

11. தேர்வறைக் கண்காணிப்பாளர்கள் **9.40** மணிக்கு தேர்வறைக்கு அனுப்ப வேண்டும்.

12. தேர்வர்களை **9.45** மணிக்கு தேர்வறைக்குள் அனுமதித்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து உரிய இருக்கையில் அமர வைக்க அறை கண்காணிப்பாளருக்கு அறிவுறுத்த வேண்டும்.

13. வினாத்தாள் கட்டு பிரிக்கப்பட்டு தேர்வறை கண்காணிப்பாளர்களுக்கு **9.50**–க்குள் வழங்கப்பட வேண்டும்.

..2..

14. தேர்வர்கள் தங்களுடன் கைக்கிருமி நாசினி (Hand Sanitizer) எடுத்து வந்திருந்தால், அதனை தேர்வறைக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

15. தேர்வர்கள் தங்களுடன் தண்ணீர் பாட்டில் (Transparent Water Bottle only) எடுத்து வந்திருந்தால், அதனை தேர்வறைக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

16. கழிப்பறைகள் நன்றாக சுத்தம் செய்து கிருமி நாசினி தெளித்து சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

17. தேர்வு முடிவடைந்த பின்பு தேர்வர்களை போதிய இடைவெளியுடன் தேர்வு மையத்தை விட்டு அனுப்பி வைக்க அறிவுறுத்த வேண்டும்.

18. **பெயர் பட்டியலில் திருத்தத்தினையும் சரிவர மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்தம் அனைத்தும் சிவப்பு மையினால் மட்டுமே செய்யப்பட வேண்டும். மேலும் வருகைப்புரிந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் OMR விடைத்தாட்கள் சரிபார்க்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

19. அறைக் கண்காணிப்பாளர் தேர்வர்களின் பதிவெண் மற்றும் பெயர் ஆகிய கலங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின் அவர் கையொப்பமிட வேண்டும் என்ற அறிவுரையை தவறாது பின்பற்றுமாறு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

20. தேர்வு முடிந்தவுடன் முதன்மைக் கண்காணிப்பாளர்கள் கீழ்க்குறிப்பிட்ட படிவத்தினை பூர்த்தி செய்து Packet – III உடன் இணைத்தனுப்ப வேண்டும்.

Format -I

| **Centre No. & Name** | **Total No.of Registered Candidates** | **Total No.of Present Candidates (used OMR)** | **Total No.of Absent Candidates (unused OMR)** | **Total No.of Blank OMR (unused OMR)** |
|---|---|---|---|---|
| | | | | |

Format -II

| **Centre No. & Name** | **Total No.of Question Papers received** | **Total No.of Question papers used (Present)** | **Total No.of balance Question paper** |
|---|---|---|---|
| | | | |

21. தேர்வு முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலரிடம் கீழ்க்குறிப்பிட்டவாறு விடைத்தாள் கட்டுக்களை ஒப்படைக்க வேண்டும்.

22. தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள் திருப்பி ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்

| **திருப்பி அனுப்பி வைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம்** | **அமைய வேண்டிய கட்டுக்கள்** | **ஒப்படைக்க வேண்டிய அலுவலகம்** |
|---|---|---|
| 1. உபயோகிக்கப்பட்ட விடைத்தாட்கள் (Used OMR Answer Sheet) (PACKET – I)<br>2. உபயோகிக்கப்படாத விடைத்தாட்கள் (Unused OMR Answer Sheet) (PACKET – II)<br>3. திருத்தப்பட்ட பெயர் பட்டியல் (Corrected Nominal Roll) (PACKET – III)<br>4. FORMAT – 1,2 (PACKET – III) | இம்மூன்று கட்டுகளையும் (Packet – I, II, III) துணி பையைக் கொண்டு ஒரே கட்டாக கட்டி அரக்கு முத்திரையிடப்பட வேண்டும். | மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். |
| 5. உபயோகிக்கப்படாத வினாத்தாள் புத்தகங்கள் (Unused Question Booklets) | தனிக்கட்டு | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் – இந்த கட்டினை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலேயே வைத்து பின்னர் கழிவுத்தாளாகக் கருதி அப்புரப்படுத்த அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |

**ஒம்/–**
**இயக்குநர்**

<u>தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கு முக்கிய அறிவுரைகள்</u> :

1. தேர்வறைக் கண்காணிப்பாளர்கள் **9.40** மணிக்கு தேர்வறைக்கு செல்ல வேண்டும்.

2. தேர்வர்களை **9.45** மணிக்கு தேர்வறைக்குள் அனுமதித்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து உரிய இருக்கையில் அமர வைக்க வேண்டும்.

3. வினாத்தாள் உறை பெறப்பட்டு, **9.55** மணிக்கு அறைக் கண்காணிப்பாளர்களால் வினாத்தாள் உறை பிரிக்கப்பட்டு **10.00** மணிக்கு தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

4. தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் வினாத்தாள் புத்தகத்தில் (Question Booklet) விடைகளைக் குறிக்க வேண்டாம் என்றும், வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் மட்டுமே (OMR Answer Sheet) விடைகளைக் குறிக்க வேண்டும் என்பததையும் தேர்வர்களுக்கு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் **20** மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்வு அறைக்கும் **20** வினாத்தாள் மற்றும் விடைத்தாள் மட்டுமே வழங்கப்படும்.

6. தேர்வு முடிந்தவுடன் தேர்வர்கள் வினாத்தாள் புத்தகத்தை (Question Booklet) எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும்.

7. அறைக் கண்காணிப்பாளர் தேர்வர்களின் பதிவெண் மற்றும் பெயர் ஆகிய கலங்கள் சரியாக உள்ளதாக என்பதை உறுதி செய்த பின் அவர் கையொப்பமிட வேண்டும். OMR விடைத்தாளில் தேர்வரின் கையொப்பத்தினை பெற வேண்டும். தேர்வர்கள் OMR விடைத்தாளில் தாம் எந்த கலத்திற்கான விடை சரி என நினைக்கிறரோ அந்த கலம் கருப்பு மை கொண்ட பால் பாய்ண்ட் பேனாவினால் மட்டுமே நிழற்படுத்தப்பட வேண்டும் என தேர்வர்களுக்கு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தல் வேண்டும்.

..2..

8. பெயர் பட்டியலில் திருத்தத்தினையும் சரிவர மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்தம் அனைத்தும் சிவப்பு மையினால் மட்டுமே செய்யப்பட வேண்டும். மேலும் வருகைபுரிந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் OMR விடைத்தாட்கள் சரிபார்க்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**FORMAT – 3**

**TAMIL NADU RURAL TALENT SERCH EXAMINATION, FEBRUARY -2022**

To

இணை இயக்குநர் (பணியாளர்)
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை **–6**

From

தேர்வு மைய எண்
தேர்வு மைய பெயர்
தேர்வு மைய முகவரி

தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் துறை அலுவலர்